[25th January 1972

சென்னையில் ஓட்டல் இம்பீரியல், ஓட்டல் ஓஷியானிக், ஓட்டல் அசோகா, ஓட்டல் கிளாரிட்ஜ், ஓட்டல், சவேரா, ஓட்டல் விக்டோரியா, ஓட்டல் அருண், குவின்ஸ் ஓட்டல், ஓட்டல் கணேஷ் ஆகியவை அந்த ஸ்டார் ஓட்டல்களாக கருதப்படுகின்றன.

Hippies

* 18. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to ban the movement of hippies in Tamil Nadu ; and

(*b*) whether the Government realise that the culture of Tamil Nadu is affected due to the movement of hippies?

ஹிப்பிகள்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாட்டில் ஹிப்பிகள் நடமாடுவதை தடை செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) அவர்கள் தமிழ் நாட்டில் நடமாடுவதால் தமிழ் நாட்டின் கலாச்சாரம் பாதிக்கப்படுவதாக அரசாங்கம் உணர்கின்றதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஆர். கிருஷ்னசாமி நாயுடு : ஹிப்பிகள் என்ற பெயர் எப்படி வந்தது ? விளக்கம் பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எப்படி வந்தது என்று தெரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட உருவங்கள் கொண்டவர்களை நாம் ஹிப்பிகள் என்று அழைக்கிறோம். ஹிப்பிகள் என்று தனி இனமோ ஜாதியோ இது வரையில் இல்லை.

THIRU A. R. DAMODARAN : The cult of 'hippidom' has now extended to Indian children also. May I know whether the answer relates to foreign hippies or also to Indian hippies?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த பதில் அந்நிய ஹிப்பிகளைப் பொறுத்துத்தான் அளிக்கப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அடையாறில் உள்ள எலியட் கடற்கரையில் சென்னைக்கு வருகிற ஹிப்பிகளில் பலர் வந்து ஆடையின்றி குளிப்பதாகவும் அதன் காரணமாக அங்குச் செல்வோர் அறுவறுப்பு அடைவதாகவும் சொல்லப்படுகிறதே, அதுபற்றி அரசிற்குத் தெரியுமா ?

25th January 1972]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இருந்தாலும் அதைப் பற்றி ஒரு சிறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். இதுவரை, இந்த மாநிலத்திற்குள் வந்துள்ள ஹிப்பிகள் இங்கு சமூக, சட்டம்--ஒழுங்குப் பிரச்னைகள் எதனையும் தோற்றுவிக்கவில்லை. ஹிப்பிபோல் தோற்றமளித்த ஐரிஷ் நாட்டவரான ஜேன் காவின் ஸ்டேஸி ஹால் என்பவர் 27—7—71 அன்று சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கக் காணப்பட்டார். தமிழ் நாடு பிச்சைக்காரர்கள் சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் காவலர் அவரைக் கைது செய்தனர். இருப்பினும், பின்னர் அவர் தமிழ் நாடு பிச்சைக்காரர்கள் நன்னடத்தைச் சட்டத்தின் 9-வது பிரிவின் கீழ் விடுவிக்கப்பட்டார். இந்த ஒரேயொரு நிகழ்ச்சியைத் தவிர, ஹிப்பிகள் நடவடிக்கை எதுவும் தமிழ் நாட்டின் பண்பாட்டைப் பாதித்ததாக அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அளவுக்கு ஹிப்பிகள் பிரச்னை மிகக் கடுமையாக இல்லாதிருப்பினும் கூட, ஹிப்பிகளின் நடமாட்டங்கள், நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருமாறும், அவர்கள் மயக்கமூட்டும் போதைப் பொருள்களை விற்பது, தரக்குறைவாக நடந்துகொள்வது, நிலையின்றி அங்குமிங்கும் திரிவது, பிச்சையெடுப்பது முதலிய வற்றில் ஈடுபட்டால், அதனை மிகக் கடுமையாக எடுத்துக் கொள்ளுமாறும், தொடர்புடைய உள்ளூர் அதிகார மன்றங்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகை வெளிநாட்ட வர்கள் தவறான செயலில் ஈடுபட்டனர் என நீதிமன்றத்தில் நிரூபிக்கப் போதுமான சாட்சியம் கிடைக்காவிட்டாலும் கூட, அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப் பட வேண்டுமென்றும், இந்த வகை வெளி நாட்டவர்கள், அவர்கள் நுழைவிசைவில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கும் அதிகமாக இந்தியாவில் தங்கக் கால நீட்டிப்பு அளிக்கப்படக் கூடாது என்றும், அவர்கள் நுழைவிசைவினைப் பெறாமல், விமானம் மூலம் அல்லது கடல் வழியாக இந்தியாவிற்கு வந்துள்ளவர்களானால், இந்திய நாட்டில் இறங்குவதற்காக அவர்களுக்கு அனுமதி அளிக் கப்பட்ட 21 நாட்களுக்கு மேல் இந்தியாவில் அவர்கள் தங்கக் கால நீட்டிப்பு அளிக்கப்படக் கூடாது என்றும் கூட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

THIRU G. VASANTHA PAI : Will the Government consider, Sir, putting them in the Zoo for a change?

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, ஹிப்பிகள் தாராளமாகச் செலவு செய்துகொண்டிருக்கிறார்களே. அது நம் நாட்டுப் பணமா அல்லது அவர்கள் எங்கிருந்து வருகிறார்களோ அங்கேயிருந்து பணம் வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் அங்கிருந்து வரும்போது கொண்டு வருகிறார்கள். சில பேர் கேட்டாலும் தருவார்கள். (சிரிப்பு)

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: ஹிப்பிகளின் அடிப்படை நோக்கம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடிப்படைக் காலத்திற்குச் செல்வதுதான் அவர்கள் நோக்கம். (சிரிப்பு)

Nuisance Caused by Vegetable Vendors.

*19 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Commissioner of Police, Madras, is aware of the nuisance caused to free flow of traffic by vegetable vendors around the Mada Streets in Mylapore?

காய்கறி விற்பவர்களால் இடையூறு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மயிலை, மாடவீதிகளைச் சுற்றி, காய்கறி விற்பவர்களால் தடங்கலற்ற போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கப்படுகிறது என்பதை சென்னை, காவல் துறைக் கமிஷனர் அறிவாரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆம்.

Change of School Hours

*20. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether there is any proposal to change the School hours; and

(b) if so, the details thereof?

பள்ளிக்கூட அலுவல் நேரங்களை மாற்றுதல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிக்கூட அலுவல் நேரங்களை மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வகுப்பு நேரங்களை மாற்றுவது நன்மை பயக்கும், என்ற கருத்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நடைமுறையில் இதனை எந்த அளவுக்கு செயல்படுத்த முடியும் என்பதுபற்றி பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவர் அவர்களே, பல பள்ளிகள் நேரத்தை மாற்றிக் கொண்டு அதைச் செயல்படுத்த முடியாமல் மீண்டும் பழைய நேரத்திற்கே வந்துவிட்டன. ஆகவே பள்ளிகளை